# அப்துல் ரகுமான் கவிதைகளில் மனிதமேம்பாட்டுச் சிந்தனைகள்

# The Humanities in the Poems of Abdul Rahman

***சை. பல்கீஸ் அன்பியா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவை, இந்தியா

**S. Balgis Anbia**
*Research Scholar, Assistant Professor in Tamil*
*Rathinam College of Arts and Science*
*Coimbatore, India*

***முனைவர் ந. பரமேஸ்வரி***
துறைத் தலைவர், தமிழ்த்துறை
இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவை, இந்தியா

**Dr. N. Parameswari**
*Head, Department of Tamil*
*Rathinam College of Arts and Science*
*Coimbatore, India*

## ஆய்வுச் சுருக்கம்

*கவி அடையாளமாய் போற்றப்படும் கவிக்கோ அப்துல்ரகுமான் அவர்களின் கவிதைகளில் சமுதாயத்தின் எதார்த்தங்கள் என்றும் ஊடுருவியே செல்கின்றது. வாழ்க்கைத் தத்துவங்கள் பலவாக இருந்தாலும் அவற்றில் சிலவற்றை தம் கவிதைப் படைப்பில் பதியத் தவறியதில்லை. இவரின் படைப்புகள் மனித சமூகத்தின் அடையங்களாகத் திகழ்கின்றன. இயந்திரமான இந்நவீன உலகில் பெயர், புகழ், சமூக அங்கீகாரம், ஆடம்பர வாழ்க்கை என்ற வட்டத்துக்குள் சுழல்வதால் வாழ்வின் நிலைக்கலன்களான அன்பு, பாசம், நேசம், பொதுநலம் என்ற உன்னதம் மனிதனிலிருந்து இல்லாமல் போகிறது. தன்னை மட்டும் மேம்படுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாது தன்னால் தன் சமூகமும் மேம்பட வேண்டும் என்ற எண்ணமும் தோன்ற வேண்டும். ஏனெனில் தனி மனிதமேம்பாடு சமுதாயத்தையும் மேம்படுத்தும்.*

*அதோடு நில்லாமல் "சமயம் போதிக்கின்ற கொல்லாமை, திருடாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை இவற்றினை ஏற்றுக்கொண்டு சமுதாயத்தில் அதன் மேம்பாட்டிற்கு வழிவகுக்கக் கூடிய நற்காட்சி, நற்சிந்தனை, நற்செயல், நற்சொல் நல்வாழ்க்கை, நல்முயற்சி, நற்கடைப்பிடிப்பு, நல்லுலகத்தோர் தவப்பாடு முதலிய*

## Abstract

*Poetically acclaimed poet Abdul Rahman's poetry always penetrates the realities of society. Although there are many philosophies of life, some of them have been written in his poetry. His works are a testament to humanity. In this mechanized modern world, as name, fame, social recognition, and luxury revolve in the circle of life, the noblest elements of life - love, affection, and the common good - disappear from man. He not only wanted to improve himself, but also to improve his community. Because the individual is better than the community. On the other hand, the concept of 'peace among us if we accept the religion's teaching of non-killing, non-stealing, non-smuggling, non-believing, and engage ourselves in the virtues of goodness, good deeds, good word, good life, good effort, self-restraint, righteousness, etc., which will lead to its development in society certainly implies human development. Abdul Rahman has also mentioned this in his poetry.*

*அறநெறிகளில் நம்மை ஈடுபடுத்திக்கொண்டு விட்டால் நம்மிடையே நிச்சயமாக அமைதிநிலவும்”*[7] *என்ற கருத்தானது மனித மேம்பாட்டை உணர்த்துகிறது. அப்துல்ரகுமான் அவர்களும் தம் கவிதைப் படைப்புகளில் இத்தகைய நெறிகளை பறைசாற்றுகின்றார்.*

**Citation**

Balgis Anbia, S., and N. Parameswari. “The Humanities in the Poems of Abdul Rahman.” *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 45–50.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20069344*

**வாழ்க்கைச்சிறை**

*வாழ்க்கை என்பது பலபோராட்டங்களை கடந்து வெற்றிகொள்வது. தாயின் கருவறையில் தொடங்கும் இப்போராட்டம் ஒருமனிதன் கல்லறை சென்று அடையும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வாழ்க்கையில் நாம் எப்பொழுதும் எதற்காகவாவது ஒருபிடியில் சிக்கியிருக்கின்றோம். நூலில் கட்டப்பட்ட காற்றாடி போன்று. அச்சைப் பற்றிசுழலும் சக்கரத்தைப் போன்று கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு இருக்கும் விமானம் போன்று நமது வாழ்க்கையின் ஓட்டம் அன்பு, பாசம், நேசம், பக்தி, காதல் என்ற அச்சாணியைப் பற்றியே நிகழ்கிறது. நம் கண்களுக்கு நேரடியாகத் தெரியும் உருவமாகவும் கண்ணுக்குப் புலனாகா அருவமாகவும் இருந்து நம்மை வழிநடத்திச் செல்கிறது. வாழ்க்கை என்ற சிறையில் நாம் என்றும் ஆயுள் கைதிகள் தான். இதனை அப்துல்ரகுமான் விவரிக்கின்றார்.*

***பைச்சிறை இருந்ததோ***
***பத்துத் திங்கள்***
***கைச்சிறை கண்சிறை***
***காளை வயதில்***
***மெய்ச் சிறைக்குள்ளே***
***வீழ்ந்து தவிக்கும்***
***ஆவிக் கைதி***
***விடுதலை பெறும் வரை***
***அகில வாழ்க்கையே***
***ஆயள் தண்டனை!***
***இதில் சுதந்திரம் என்பது***
***சும்மா சொல்வது***[2]

*நமது வாழ்க்கை சுதந்திரமாக சுழல்வது அன்று ஏதாவது ஒரு சக்தியுடன் துணையுடன் இயங்குவதாகும் வாழ்க்கைச் சிறையில் ஆயுள் கைதிகள் நாம் என்று கூறுகிறார்.*

**ஆசை கொள்ளாமை**

*ஆசையே துன்பத்திற்கு காரணம் என்பது புத்தரின் அருள்வாக்காகும். ஆசை கொள்ளாத உயிர்களே இல்லை. ஆயினும் ஆசை கொள்வதால் துன்பமே மிஞ்சுகிறது. குழந்தை பருவத்தில் பொம்மைக்காக தொடங்கிய ஆசை வாழ்க்கை முழுவதும் அனைத்திற்கு மான ஆசை என்று மனித வாழ்க்கை ஆசைகளுக்குள் புதைந்து விடுகிறது. ஆசைபடுவது குற்றமல்ல நமது ஆசை மற்றவர்களை நிராசைக்கு உள்ளாக்காமல் இருத்தல் நன்மை பயக்கும். சரித்திர காலத்தில் நாம் காணுகிறோம். ஒரு அரசன் இன்னொரு நாட்டின் செல்வவளங்களுக்கு ஆசைப்பட்டு போர் தொடுத்தான் என்று ஆனால் போரின் மூலம் பல உயிர்கள் அழிய நேர்கிறது. ஆக ஆசை வியப்படையச் செய்யவேண்டும். விபத்தடையச் செய்யக்கூடாது. ஆசைகளுள் முதன்மையானதாகக் காண விழைவது பதவிஆசை எதற்கெடுத்தாலும் ஆசைபடுபவன் தன் சாவையும் கூட "சிவலோகபதவி" என்று கூறுகின்றான்.*

***"எத்தனை பதவிவெறி***
***இந்தமனிதருக்கு?***
***செத்தால் அதையும்***
***சிவலோக பதவியென்பார்"***[3]

*உழைத்து முன்னேறி பதவியைப் பெற வேண்டும். பதவி என்னும் ஆசை தான் வெறியாகத்*

*தோன்றுகிறது. ஆசைபடும் போது ஒருவரை மட்டும் பாதிக்கும் .ஆசை வெறியாக மாறும்பொழுது பலரையும் பாதிக்கிறது. தன் வேர்வை சிந்தி தன்மானம் இழக்காமல் பெறும் பதவியினாலே பயன் உண்டு. அவ்வாறின்றி பெறும் பதவி மூடருக்கு கிடைப்பது போலாகும்.*

***வித்தெடுத்துத் தூவி***
***வியர்க்காமல் உமிச்சிப்பி***
***முத்தெடுக்க முந்தும்***
***மூடர்க்கு உரிமையுண்டோ?***[4]

*பதவியை தான் தேடிச் செல்லக்கூடாது அதுவாக நாம் சிந்தும் வியர்வைக்காக நமக்குக் கிடைக்க வேண்டும். உழைப்பே உயர்வு தரும் அவ்வாறின்றி இருக்கும் மூடர்களுக்கு எதிலும் உரிமையில்லை என்று கவிக்கோ கூறுகிறார். அதுமட்டுமல்லாது அத்தகையோர் பரத்தைக்கு ஒப்பானவர்கள் என்று சாடுகிறார் கவிதாசுரேஷ் அதாவது*

***பாறாங்கல்லைப் பார்த்தாலும்***
***ஓடி ஓடி உட்காருவான்***
***பதவி பைத்தியம்***[5]

*எந்த பதவியாய் இருந்தால் என்ன பதவி கிடைத்தால் போதும் என்று பாராங்கல்லை பார்த்தாலும் அமர்கிறான் பதவி பைத்தியம் என்பது இதன் கருத்தாகும். பதவி என்றவுடன் நினைவிற்கு வருவது பதவி ஒன்றே. அரசியல் மூலமாக மக்களுக்கு நன்மைகளை செய்வதை காட்டிலும் தீயவை அதிகம் நிகழ்கிறது. பதவிவெறி என்பது அது கிடைப்பதற்காக எது போனாலும் பரவாயில்லை என்ற எண்ணத்தை உண்டாக்கும். அரசியல் இங்கே அநீதி இழைக்கிறது. பணம் ஒன்றே குறிக்கோளாய் ஜனநாயகம் இன்று பணநாயகமாக மாறியுள்ளது. பணத்தின் பக்கமே நீதியும் சாய்கிறது என்ற நிலை உண்டாகியுள்ளது. இவற்றை எல்லாம் அப்துல் ரகுமான் சாடுகின்றார்.*

**இன்றைய சமூகநிலை**

*குழந்தைப் பருவம் என்று ஒவ்வொரு மனிதனுக்கும் கவலை துன்பம் பணம் செருக்கு பகை இவை போன்ற எந்த குணமும் இன்றி பாசத்திற்கும் அன்பிற்கும் மட்டுமே கட்டுப்பட்டு வாழ்ந்தகாலம். ஆனால் பருவம் எய்தி வளர்ந்த பின்பு பல்வேறு பிரச்சனைகளால் நாம் நம்மைத் தொலைத்து விடுகிறோம். இளம் வயதில் கண்ணாமூச்சி ஆடும்போது தேடுதல் உண்டு. ஆனால் இப்போது நாம் நம்மையே மறைத்துக் கொண்டு தேடுகிறோம். இதனைக் கவிக்கோ கவிதையாக வடிக்கிறார்.*

***அப்போது கண்ணா மூச்சியில்***
***ஒளிந்திருப்பவர்களைக் கண்டுபிடித்தோம்***
***இப்போதோ வாழ்க்கை ஆட்டத்தில்***
***நாங்கள் எங்களையே***[6]

*எனவே இறைவா அறியா பருவம் மீண்டும் கொடு என்று கவிஞர் உளமுருக வேண்டுகிறார்.*

**சுயநலம் இல்லாமல் வாழ்தல்**

*இவ்வுலகில் பிறந்தோம் இறந்தோம் என்று இல்லாமல் வாழும்காலத்தில் நாம் மற்றவருக்காக ஏதாவது செய்யவேண்டும். அனைத்தும் எனக்கே என்றில்லாமல் அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். நம்மைச் சார்ந்தவர்களை இன்பமடைய செய்ய வேண்டும். இவ்வுலகில் வாழ்க்கை என்னும் பற்று எழுதிய நாம் நமது பங்கிற்காக ஒருவரவையும் வைத்து விட்டுச்*

*செல்வதில்லை என்பது கவிக்கோவின் குற்றச்சாட்டாகும். அதாவது*

***அறிமுகம் இல்லாத கைகளால்***
***கண்ணீர் துடைக்கப்பட்டவனே!***
***சகமனிதனின்***
***ஒரு துளி கண்ணீரை***
***நீ துடைத்திருக்கிறாயா?***[7]

*என்று வினவுகிறார். நாம் யாரைப் பற்றியும் கவலை கொள்வதில்லை. சுயநல உலகில் சுயசரிதை வடிக்கிறோம். நாம் வாழ்ந்தோம் என்பதற்கான ஒரு சுவடையாவது விட்டுச் செல்லவேண்டும்.*

***உன் சாவில் சாம்பலை அல்ல***
***நெருப்பை விட்டுச் செல்***
***மண்ணில் ஒரு காயத்தை அல்ல***
***ஒரு மருந்தை விட்டுச்செல்***[8]

*வாழும் போதும் வாழ்க்கைக்குப் பிறகும் நாம் பிறருக்குப் பயனளிக்க வேண்டும். நமது வாழ்க்கையானது சுயநல அடைப்புக்குள் தன்னை அடக்கிக் கொள்கிறது. ஆதலால் நம் பலிபீடத்திற்காக வளர்க்கப்படும் ஆடுகளாகவே இருக்கிறோம் என்று ரகுமான் தம் கவிதை வரியில் உணர்த்துகிறார்*

***நாம் அடைப்புக் குறிக்குள்***
***அடைக்கப்பட்டவர்கள்***
***விற்பனைக்காகச்***
***சந்தையில் கூறுகட்டிக் கிடைப்பவர்கள்***
***சட்டத்தின் கைதிகள்***
***சம்பிரதாயத்தின் கொத்தடிமைகள்***[9]

*இவ்வாறே நாம் பயணிப்பதால் நாம் இவ்வுலகிற்காக செய்வது ஏதுமில்லை. நம்மை தாங்குகின்ற உலகிற்கு நாம் செய்வது ஏராளமாக உள்ளது.*

**முடிபு**

*எல்லாக் கலை வடிவங்களும் மக்களுக்கானதே என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தன் கவிதைப் படைப்பில் மனிதசமூகம் எதிர்கொள்ளும் அன்றாட நிகழ்வுகளை இவரது கவிதைகள் படம் பிடித்துக்காட்டுகின்றன. மனிதனின்ஆசைகள் அவனது வாழ்க்கைத் தரத்தை சில நேரங்களில் உயர்த்தினாலும் நாம் சார்ந்த சமூகத்தைப் பாதித்தல் கூடாது என்பதில் உறுதி கொள்ளவேண்டும். பன்னெடுங்காலமாய் அன்பால் கட்டுண்ட மனித வாழ்க்கை பல்வேறுகாரணங்களால் சூழலால் நிலைகுலையும் அபாயம் நிகழ்கிறது. எவ்வாறாக நிலைமாறினும் தன்னிலை மாறா மனித மாண்புகள் என்றென்றும் தழைத்து நிலைக் கொள்ளவேண்டும். தன்னிகரில்லா மனிதம் பூமி முழுதும் பரந்தோங்க வேண்டும் என்பதே கவிஞர் அப்துல்ரகுமான் அவர்கள் கொண்ட ஆசையும் ஆகும்.*

**குறிப்புகள்**

1. *கவிதா சுரேஷ் மெய்யப்பன், காதல் சிறகுகள்,ப.26*
2. *அப்துல் ரகுமான், ஆலாபனை, பக்.(21-22)*
3. *மேலது, ப.32*

4. *மேலது,ப.33*
5. *மேலது,ப.53*

**References**


1. S.Ragunnadhan (2004), Vetrumaiil Otrumai, sixthsence publication pg (47-48)
2. Abdul Rahman (1991) Neyar viruppam, Kavikko publisher, pg (16) 3.
3. Abdul Rahman (1991) Neyar viruppam, Kavikko publisher, pg (17)
4. Abdul Rahman (1991) Neyar viruppam, Kavikko publisher, pg(17)
5. Kavitha Suresh meiyappan, Kaadhal siragukal, (P.no 26)
6. Abdul Rahman, Alabanai, (P.no.21-22)
7. Abdul Rahman, Alabanai (P.no.32)
8. Abdul Rahman, Alabanai,(P.no.33)
9. Abdul Rahman, Alabanai, (P.no.53)